**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.187/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | மாரியம்மாள் | Prosecution | PW1–Cross |
| Father Name | க/பெ. சண்முகநாதன் | Defence | |
| Village | தென்பாதி–சீர்காழி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 47/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **26.02.2026**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் நாலவரும் எனது கணவரின் தம்பிகள் மற்றும் அவர்களின் மனைவிகள் என்றால் சரிதான். நான் எதிரிகள் மீது சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS.125/2021 என்ற நம்பரில் குடும்ப சொத்து பிரச்சனை காரணமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் குடும்ப சொத்து இல்லை. தனிபட்ட சொத்துக்காக அவர்கள் மீது வழக்கு தொடர்ந்துள்ளேன். இந்த வழக்கு நான் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக என் மீதும் எனது கணவர் மீதும் சீர்காழி காவல்நிலையத்தில் குற்ற எண். 1558/2020 வழக்கு என் மீதும் என் கணவர் மீதும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த வழக்கு பொய் வழக்கு. மேற்படி வழக்கில் நானும் எனது கணவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டு சீர்காழி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியுள்ளோமா என்றால் அப்படி எதுவும் செலுத்தவில்லை.

அதே போல் ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையத்தின் FIR No.365/2022 வழக்கில் என் மீதும் என் கணவர் மீதும் எதிரிகள் புகார் கொடுத்து பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பொய்வழக்கு ஆகும். அதே போல் ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையத்தில் FIR No.358/2023 வழக்கில் என் மீதும் என் கணவர் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுவும் பொய்வழக்கு தான். அந்த வழக்கு சீர்காழி சார்பு

நீதிமன்றத்தில் SC.No.36/2024 நடைபெற்று வருகிறது என்றால் அதுவும் பொய்வழக்கு தான் நான் ஊரில் இல்லாத போது நடைபெற்றது. என்னை மருத்துவ மனையில் சிகிச்சைக்கு சேர்த்தது யார் என்றால் என் கணவர் தான். மருத்துவமனையில் மருத்துவரிடம் நான்கு நபர்கள் கட்டையால் தாக்கியதாக சொல்லியுள்ளோம். யாருடைய பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்ாறல் பெயரை சொல்லி தான் கூறியுள்ளோம். மருத்துவரிடம் எனக்கு என்ன காயம் என்று கூறினோம் என்றால் தலையில் இரத்த காயம், கழுத்து, வயி உடம்பு எல்லாம் வீக்கம் என்று கூறினேன். நான் சொல்வது போல் மருத்துவ சான்றில் எந்த ஒரு காயமும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் காயம் இருந்தது.

சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் நடராஜன், பிச்சைமுத்து, பாலசுப்பிரமணியன், சரவணன், ரவி ஆகியோர் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டை சார்ந்த நபர்கள் யாருக்காவது சம்பவம் தெரியுமா என்றால் அனைவருக்கும் தெரியும். மேற்படி விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். கண்ணையன் மற்றும் வேலு இருவரும் தான் FIR.No. 1558/2020 வழக்கில் எனது கணவருக்காக ஜாமீன்தாரர் ஆவார்கள் என்றால் இல்லை. மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எவ்வளவு கூட்டம் இருக்கும் என்றால் சம்மந்தம், வள்ளி, கொத்தனார் ரவி, சங்கர் ஆகியோர்களுக்கு தெரியும்.

மேற்படி நபர்களுக்கு சம்பவம் தெரியும் என்று புகாரிலோ போலிசார் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லயுள்ளேன். அதுமாதிரி போலிசார் புகாரிலோ, நான் கொடுத்த புகாரிலோ சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அரசு மருத்துவ மனையில் என்றைய தினம் என்னிடம் போலிசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் அன்று இரவு 10.00 மணிக்கு விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அப்போது என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் என் கணவர் இருந்தார். அந்த சமயத்தில் என் கணவர் மீதும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் எங்களை அடித்துவிட்டு முன்பாகவே எங்கள் மீது பொய்புகார் கொடுத்துள்ளார்கள்.

குடும்ப பொது சொத்தில் 22.10.2020 ம் தேதி கொள்ளிடம் சார் பதிவாளர் அலுவலத்தில் ஆவண எண். 1140/2020 ஆவணமாக என் கணவர் எனக்கு செட்டில் மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது குடும்ப சொத்து இல்லை தனிப்பட்ட முறையில் கிடைத்த சொத்து. அந்த சொத்தை தான் எனக்கு எழுதி வைத்தார். குடும்ப சொத்து சம்பந்தமாக எருக்கூரில் உள்ள சொத்துக்கு என் கணவருக்கும் எதிரிகளுக்கும் இடையே பாகப்பிரிவினை சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் அது குடும்ப சொத்து இல்லை தனிப்பட்ட சொத்து. வாக்குமூலத்தில் சொத்து சம்பந்தமாக முன்விரோதம் உள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நீங்கள் சொல்வது போல் எதிரிகள் யாரும் திட்டவும் இல்லை தாக்கவும் இல்லை மிரட்டவும் இல்லை என்றால் சரியல்ல.

நீங்கள் சொல்லவது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் மீது எதிரிகள் கொடுத்த புகாரை வாபஸ் பெற வேண்டி எதிரிகள் மீது என் கணவரின் துாண்டுதலின் பேரில் பொய் வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் எனக்கு எந்தவிதமான காயமோ பாதிப்போ இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளை பழிவாங்கும் நோக்கில் நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக கூறி எதிரிகள் மீது பொய்ப்புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை**